VETRI NICHAYAM

Guidance for competitive exams



# TNPSC - Model Question Answers-165

Sunday, 24 February 2013 0 comments

Like Share Sign Up to see what your friends like.

தேர்வுக்கு தயாராகி வரும் தோழர்களுக்கு வணக்கம்.. பல தினசரி செய்தித்தாள்களில் வந்த டி.என்.பி.எஸ்.சி மாதிரி வினாக்கள் இங்கே கொடுக்கப்படுகின்றன. அந்த வகையில் தினத்தந்தி இதழில் வெளியான டி.என்.பி.எஸ்.சி மாதிரி வினா விடைகள் இப்போது பிரசுரிக்கப்படுகிறது. பதிவுகளை தவறவிடாமல் தொடர்ந்து புதிய பதிவுகளை வாசிக்க விரும்புவோர் மின்னஞ்சலை பதிவு செய்து தங்களை தளத்தோடு இணைந்துகொள்ளுங்கள்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்



91. ஜாலியன் வாலாபாக் நிகழ்ச்சி நடைபெற்றது
அ) 12 ஏப்ரல் 1919 ஆ) 13 ஏப்ரல் 1919
இ) 14 ஏப்ரல் 1919 ஈ) 30 ஏப்ரல் 1919

92. தவறான கூற்று
அ) அனைத்து வட்டமேஜை மாநாடுகளிலும் கலந்து கொண்டவர் அம்பேத்கார்
ஆ) முதல் வட்டமேஜை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார்
இ) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார்
ஈ) வட்டமேஜை மாநாடுகள் லண்டனில் நடத்தப்பட்டது

93. கிழக்கிந்திய கம்பெனியின் கடைசி தலைமை ஆளுநரும், அரசியின் முதல் அரச பிரதிநிதியும் யார்
அ) கர்சன் ஆ) கானிங் இ) ரிப்பன் ஈ) மௌண்ட்பேட்டன்

94. தவறான ஜோடி எது?
அ) எல்லைக்காந்தி- கான் அப்துல் கபார்கான்
ஆ) ஆந்திர கேசரி- பிரகாசம்
இ) முது பெரும் மனிதர் - தாதபாய் நௌரோஜி

அ) விடுதலை மசோதா ஆ) நிதி மசோதா
இ) அடக்குமுறை மசோதா
ஈ) டொமினியன் அந்தஸ்த்து

98. கிளிம்சஸ் ஆப் வோல்ட் ஹிஸ்டரி என்ற நூலை எழுதியவர்
அ) மகாத்மா காந்தி ஆ) ஜவஹர்லால் நேரு
இ) அபுல்கலாம் ஆசாத் ஈ) மோதிலால் நேரு

99. சைமன் தூதுக்குழு இந்தியா வந்த ஆண்டு
அ) 1928 ஆ)1927 இ) 1929 ஈ) 1930

100.பத்ருத்தீன் தியாப்ஜி தலைமை தாங்கியது
அ) 1885 பம்பாய் காங்கிரஸ் மாநாடு
ஆ) 1886 கொல்கத்தாவில் நடந்த இரண்டாவது காங்கிரஸ் மாநாடு
இ) 1887 சென்னையில் நடந்த மூன்றாவது காங்கிரஸ் மாநாடு
ஈ) 1907 சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாடு

**விடைகள்:**
1-ஆ, 2-அ, 3-ஆ, 4-ஆ, 5-ஆ, 6-ஆ, 7-ஈ, 8-அ, 9-ஈ, 10-ஈ, 11-அ, 12-அ, 13-ஆ, 14-இ, 15-ஆ, 16-இ, 17-ஆ, 18-ஈ, 19-ஆ,

FOLLOWERS

Followers (92) Next

Follow

451 readers BY FEEDBURNER

Subscribe here to get new updates

Enter your email address Sign Up

SEARCH THIS BLOG

Search

Topics :

Choose Categories

POPULAR POSTS

TNPSC - பொருளாதாரம்- முக்கிய வினா விடைகள்-1

1.ஆபரேஷன் பிளட் என்பது எதனை குறிக்கும்? பால்வள மேம்பாடு

TNPSC - Model Question Answers-244

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

ஈ) இரும்பு மனிதர்- நேதாஜி

95. ஆஸாத் ஹிந்த் படையின் பெண்கள் அணித் தலைவர்
   அ) லெட்சுமி   ஆ) ஜான்சிராணி
   இ) சுதேசி கிருபாளனி   ஈ) அன்னிபெசன்ட்

96. 1939 செப்டம்பர் 22, விடுதலை நாளாக ஜின்னாவால் கொண்டாடப்பட்ட காரணம்
   அ) ஆகஸ்டு கொடை
   ஆ) 8 மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா
   இ) பாகிஸ்தான் கோரிக்கை எழுப்பப்பட்ட நாள்
   ஈ) காந்தியின் தனிநபர் சத்தியாகிரகம்

97. ரௌலட் சட்டம் என்பது

20-ஆ, 21-இ, 22-இ, 23-அ, 24-அ, 25-இ, 26-அ, 27-அ, 28-ஆ, 29-அ, 30-இ, 31-அ, 32-ஆ, 33-ஆ, 34-இ, 35-இ, 36-அ, 37-அ, 38-ஈ, 39-அ, 40-இ, 41-ஆ, 42-ஈ, 43-ஆ, 44-அ, 45-இ, 46-அ, 47-ஆ, 48-அ, 49-இ, 50-அ, 51-இ, 52-ஆ, 53-அ, 54-அ, 55-ஆ, 56-இ, 57-அ, 58-ஆ, 59-இ, 60-ஆ, 61-அ, 62-ஆ, 63-இ, 64-இ, 65-அ, 66-ஆ, 67-இ, 68-இ, 69-ஆ, 70-அ, 71-அ, 72-அ, 73-ஆ, 74-ஈ, 75-ஆ, 76-அ, 77-அ, 78-அ, 79-இ, 80-ஆ, 81-இ, 82-இ, 83-அ, 84-அ, 85-ஈ, 86-அ, 87-ஆ, 88-ஈ, 89-ஈ, 90-அ, 91-ஆ, 92-ஆ, 93-ஆ, 94-ஈ, 95-அ, 96-ஆ, 97-இ, 98-ஆ, 99-அ, 100-இ

(நாளை முதல் வேதியியல் தொடரும்)

## வரலாறு பாடத்திற்கு தயார் செய்வது எப்படி?

1) பாடப்பகுதியை முழுமையாகவும், விரிவாகவும் புரிந்து படித்த பின்பு வினாக்களுக்கு விடையளியுங்கள். 12-ம் வகுப்பு இந்திய வரலாறு புத்தகத்தை மறக்காமல் படியுங்கள். இந்திய விடுதலை போராட்டம் என்ற தலைப்பில் சந்தையில் கிடைக்கும் புத்தகத்தை வாங்கி குறிப்பெடுப்பது இன்னும் நல்லது.

2) ஒரு சம்பவம் குறித்து படிக்கும்போது, அது எப்போது நடந்தது என்று மட்டும் படிக்காதீர்கள். அது ஏன் நடந்தது? சம்பவத்தின் தன்மை, அதன் விளைவு, அதில் சம்பந்தப்பட்டவர்கள் போன்ற அனைத்தையும் படியுங்கள். உதாரணமாக சைமன் கமிஷன் 1928 பிப்ரவரி 3-ந் தேதி இந்தியா வந்தது என்று மட்டும் படிக்காதீர்கள். 1919-ம் ஆண்டு சட்டம் செயல்படுவதை ஆராய, 1927-ல் சைமனை தலைவராகக் கொண்ட 7 பேர் குழு அமைக்கப்பட்டது. அதில் இந்தியர் எவரும் இல்லாததால் காங்கிரஸ் இதனை புறக்கணித்தது. சைமன் எதிர்ப்பு போராட்டத்தில் லாலாலஜபதிராய் போலீஸ் தடியடியில் காயமடைந்து இறந்தார். சைமன் கமிஷன் 1929-ல் தமிழ்நாட்டுக்கு வந்தபோது சத்தியமூர்த்தி தலைமையில் போராட்டம் நடந்தது. சைமன் கமிஷன் அறிக்கையை விவாதிக்க வட்டமேஜை மாநாடு நடத்தப்பட்டது என விரிவாக படித்தால் குழப்பம் வராது. வினாக்கள் எப்படி கேட்கப்பட்டாலும் பதிலளிக்கலாம்.

3) சம்பவ வருடங்களை மட்டும் படிக்காமல் அதன் பின்புலத்தையும் படியுங்கள். உதாரணம் வினா எண்:20, 32,33,38,49 மற்றும் பல.

4) காலவரிசைப்படி படிப்பது நல்லது. உதாரணமாக வினா எண்: 17. ஆரிய சமாஜம் முந்தையதா, பிரம்ம சமாஜம் முந்தையதா என குழப்பம் வரலாம். காலவரிசைப்படி படித்திருந்தால், பிரம்மசமாஜம் 1828, ஆரிய சமாஜம் 1875, ராமகிருஷ்ண மிஷன்- 1897, தியாசபிகல் சொசைட்டி 1875-ல் நியூயார்க்கில் நிறுவப்பட்டாலும், 1886-ல்தான் தலைமையகம் அடையாறுக்கு மாற்றப்பட்டது. உங்களுக்கு அன்றைய தினமே விடையளித்திருந்தால் தேடுதல் இருந்திருக்காது. இப்போது உங்களுக்கு அனேக தகவல்கள் உங்களுக்கு கிடைத்திருக்கிறது.

5) வினா எண்: 56ஐ பாருங்கள். பாடப்புத்தகத்தை படிக்காமல் இவ்வினாவிற்கு விடையளிக்க முடியாது.

6) பெரும்பாலான வினாக்கள் உங்களின் புரிதலை சோதிக்கும் வகையில் மறைமுகமாகவும் முந்தைய தேர்வுகளில் கேட்கப்பட்ட வினாக்களுடன் அளிக்கப்பட்டுள்ளன. முந்தைய தேர்வு வினாக்களை சேகரித்து கூடுதல் பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

7) சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு குறித்து விரிவாக படியுங்கள். சமூக சீர்திருத்த இயக்கங்கள், தலைவர்கள் எழுதிய புத்தகங்கள், முக்கியமான போராட்டங்கள், வைஸ்ராய் ஆட்சி காலங்கள், முக்கிய சட்டங்கள் ஆகியவற்றை திரும்ப திரும்ப படியுங்கள்.

8) சில இயர்புக்குகளில் விடுதலை போராட்ட வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது. மறக்காமல் அதையும் படியுங்கள்.

9) வரலாறு பகுதியில் இடம் பெறும் அனைத்து வினாக்களுக்கும் சரியாக விடையளித்து விடுங்கள். திரும்பத், திரும்ப படியுங்கள். இப்போதுதான் சிலர் படிக்க ஆரம்பித்திருப்பீர்கள். நீண்ட இடைவெளிக்குப் பின் திடீரென படிக்க ஆரம்பித்துள்ளதால், ஆரம்பத்தில் மனம் ஒத்துழைக்காது. தொடர்ச்சியாக நீண்ட நேரம் படிக்க முடியாது. புரியாது. குழப்பமாக இருக்கும். எனவே மனச்சோர்வு அடையாதீர்கள். எல்லோருக்குமே தொடங்கும் போது, இப்படித்தான் இருக்கும். எனவே பயப்பட வேண்டாம். பொறுமையாகவும், நிதானமாகவும் நம்பிக்கையுடனும் படியுகள். படிப்பதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்கி, ஒரே இடத்தில் அமர்ந்து படியுங்கள். நேரத்தையும் இடத்தையும் மாற்றாதீர்கள். களைப்பாக இருக்கும் போது வினா-விடைகளைப் படியுங்கள்.

அரசியலமைப்பு, புவியியல், வரலாறு ஆகிய பாடங்களை முடித்துள்ளோம். சுமார் 35 வினாக்களுக்கு உறுதியாக விடையளித்தவிடலாம்.இன்னும்வேகத்தைஅதிகப்படுத்துங்கள். வெற்றியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். ஆம். நீங்கள் வெற்றி பெற்றால் அது கடுமையான உழைப்பின் மூலமும், தியாகத்தின் மூலம் நீங்கள் பெற்ற வெற்றி, நீங்கள் பணியாற்றப் போகும் துறைக்கு கிடைத்த பேறு. நம்பிக்கையுடன் படியுங்கள் வெற்றி பெறுவீர்கள்.

தொகுப்பு: எம்.கருணாகரன், மதுரை.

இப்பக்கத்தை டவுன்லோடு செய்ய கீழே இருக்கும் இணைப்பில் செல்லவும்.

தேர்வுக்கு தயாராகி வரும் தோழர்களுக்கு வணக்கம்.. பல தினசரி செய்தித்தாள்களில் வந்த டி.என்.பி.எஸ்.சி மாதிரி வினாக்கள் இங்கே கொடுக்கப்படுகின்ற...

TNPSC - Model Question Answers-150

தேர்வுக்கு தயாராகி வரும் தோழர்களுக்கு வணக்கம்.. பல தினசரி செய்தித்தாள்களில் வந்த டி.என்.பி.எஸ்.சி மாதிரி வினாக்கள் இங்கே கொடுக்கப்படுகின்ற...

TNPSC - Model Question Answers-1

தேர்வுக்கு தயாராகி வரும் தோழர்களுக்கு வணக்கம்.. பல தினசரி செய்தித்தாள்களில் வந்த டி.என்.பி.எஸ்.சி மாதிரி வினாக்கள் இங்கே கொடுக்கப்படுகின்...



TNPSC - புவியியல் - முக்கிய வினா விடைகள் - 1

புவியியல் - முக்கிய வினா விடைகள் வ ணக்கம் தோழர்களே.. இந்தப்பக்கத்தில் புவியியல் பகுதியின் முக்கிய வினாக்கள் இடம்பெறுக...

RECENT POSTS

Powered by Blogger.

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!




« Prev Post Home Next Post »

Download As PDF

Share this article : Like 0 Share

451 readers BY FEEDBURNER

**Subscribe here to get new updates**

Enter your email address Sign Up




Be the first of your friends to like this

Posted by admin at 05:02

**Labels: dinathanthi question answer, f.s, gt q.a, history, tnpsc model question answers, டி.என்.பி.எஸ்.சி, தினத்தந்தி, மாதிரி வினாத்தாள்**

Post a Comment

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

Enter your comment...

Comment as: Google Accoun

Publish Preview

**Support :** Cara Gampang | Creating Website | Johny Template | Mas Templatea | Pusat Promosi
Template Created by Creating Website Modify by CaraGampang.Com
Copyright © 2011. TNPSC guidance - All Rights Reserved
Proudly powered by Blogger

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!